# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009,* பெப்புருவரி மாதம் *20* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ– 43/2007

## 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபை சட்டத்தினை திருத்தம் செய்வதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்தம் செய்தல்.*

**2**. 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :–

"(1) அதிகாரசபையினது அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் சனாதிபதியினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதான (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் :–

(அ) பாதுகாப்பு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(ஆ) இலங்கைத் தரைப்படையின் பிரதி தலைமை அதிகாரி ;

(இ) இலங்கைக் கடற்படையின் பிரதி தலைமை அதிகாரி ;

(ஈ) இலங்கை வான்படையின் பிரதி தலைமை அதிகாரி ;

(உ) நலன் பேணல் என்பதற்குப் பொறுப்பான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதி;

(ஊ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(எ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து அங்கத்தவர்கள். இப்பந்தியின்கீழ் நியமிக்கப் படும் உறுப்பினரொருவர் (இதனகத்துப் பின் னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப் பீடு செய்யப்படுவார்).

(1அ) பாதுகாப்பு அமைச்சின்கீழ் பணியாற்றுகின்ற சேவா வனிதா பிரிவுகளின் தலைவர்கள் அவதானிப்பவர்களாக ரணவிரு சேவா அதிகார சபையின் முகாமைச்சபை கூட்டங்களில் பங்கு பற்றலாம்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர் முறையே சபையின் தலைவர், உபதலை வர் ஆக சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்